செ.வெ.எண்.90 நாள்.06.02.2026

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிக்கைச் செய்தி

---

புதுக்கோட்டை மாவட்டத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II (தொகுதி–II/ IIA பணிகள்) பதவிகளுக்கான முதன்மை தேர்வு எதிர்வரும் 08.02.2026 அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் ஆகிய இரு வேளைகளிலும் புதுக்கோட்டை தாலுகாவில் தெரிவு செய்யப்பட்டுள்ள SFS மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது.

தேர்வாளர்கள் தேர்வினை எழுத ஏதுவாக அனைத்து தேர்வு மையங்களிலும் சுகாதாரமான இடவசதி , சுத்தமான குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள், வெளிச்சம், மின்வசதி மற்றும் பேருந்து நிலையத்திலிருந்து தேர்வுக்கூடங்களுக்குச் செல்ல போதிய பேருந்து வசதிபோன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து தேர்வு மையங்களின் பாதுகாப்பு பணிக்காக காவலர்கள் நியமனம். செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தேர்வு மையங்களில் தேர்வு எழுதுவோர் கைப்பேசி (Mobile Phone), கணிப்பான்கள் (Calculator) மற்றும் மின்னணு கடிகாரம் (Electronic Watch) போன்ற எவ்வித மின்னணு சாதனங்களும் கொண்டு செல்ல அனுமதியில்லை. தேர்வுகூடத்திற்கு வரும் தேர்வர்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட (ஆதார், பான் போன்ற ) அடையாள அட்டையை கட்டாயமாக எடுத்து வரவேண்டும்.

மேலும், தேர்வர்கள் தேர்வு நாளன்று காலை 08.30 முதல் 09.00 மணிக்குள் மற்றும் மதியம் 1.30 முதல் 2.00 மணிக்குள் தேர்வு கூடத்திற்கு வரவேண்டும். மேற்படி நேரத்தைக் கடந்து வரும் தேர்வர்கள் கண்டிப்பாக உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா.,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai